GCI

# ஊக்கமான ஊழியத்திற்கான திறவு கோல்கள்

**முகவுரை**

**பாடத்திட்ட நோக்கங்கள்**

- **நிலைத்திருக்கக்கூடிய ஊக்கமான ஊழியஞ்செய்வது எவ்விதம் என்பதை அறிய**
- **ஊழியத்திற்கு விரோதமான கண்ணிகளை அறிய**
- **கர்த்தருக்குப் பயனுள்ள பாத்திரங்களாக நம்மை ஆயத்தப்படுத்த உதவ**

**பாடத்திட்ட மேற்பார்வை**

I.**முகவுரை**

A.**கர்த்தரைச் சேவிப்பது ஒரு சிலாக்கியம்**

B.**ஊழியர்கள் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும்**

C.**ஊழியர்கள் ஊழியத்தை செய்து முடிக்க வேண்டும்**

II. **பலனுள்ள ஊழியத்திற்குத் தேவையானவை**

A.**வார்த்தையை உபயோகியுங்கள்**

B.**சாதகமான மனநிலையை நிலை நாட்டுங்கள்**

C.**ஆரோக்கியமான சபையை வளர்க்க உழையுங்கள்**

D.**தொடர்ந்து கற்றுக் கொள்ளுங்கள்**

E.**மற்றவர்களை ஊக்கப்படுத்துங்கள்**

GCI

F.குடும்பத்தை மறந்து ஊழிய செய்யாதீர்கள்

G.மனிதனை அல்லாமல் தேவனைப் பிரியப்படுத்துங்கள்

H.ஊழியர்களையும் சபையின் பிரச்சனையும் குறித்து தவறாகப் பேசாதிருங்கள்

I.வசீகரத்தை விட நற்குணமும் தெளிவும் உள்ள நபரை நாடுங்கள்

J.ஒழுக்கத்தை கடைபிடியுங்கள்

K.சிறிய துவக்கங்களை அலட்சியப்படுத்தாதிருங்கள்

L.மக்கள் தனிப்பட்ட காரியங்க்ளை அறிவிக்கும் போது நம்பகத்தன்மையைக் காத்துக் கொள்ளுங்கள்

M.அழைப்பைக் காத்துக் கொள்ளுங்கள். சோர்வை மேற்கொள்ளுங்கள்

N.பொருளாதார பரிசுத்தத்திற்கு அர்ப்பணிப்பு

O.தேவ பக்திக்கேதுவாக உங்களைப் பக்கவப்படுத்துங்கள்

P.இளமையினிமித்தம் உங்களைக் தாழ்வாக எண்ணாதீர்கள்

Q.பரிசுத்தத்தில் அர்ப்பணம்

R.ஊழியனுடைய இருதயமுள்ளவராயிருங்கள்

S.இரண்டாம் நிலையில் இருக்கும்போது சேவை மனப்பான்மையுடன் மனரம்மியமாய் இருங்கள்

T.கொடுக்கும் மனநிலையை வளர்த்துக் கொள்ளுங்கள்

U.மன்னியுங்கள்

V.தேவன் மறப்பது போல் நீங்களும் மறங்கள்

W.துர் உபதேசங்களைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள்.

III. முடிவுரை

GCI

A.நினைவில் கொள்ள வேண்டிய பாடங்கள்

B. தவிர்க்க வேண்டிய குழிகள்

I.முகவுரை

அநேகர் துவங்கினாலும் சிலரே முடிக்கிறவர்களாய் இருக்கிறார்கள்
2 தீமோத்தேயு 4 :6-10 வ.10 தேமா இப்பிரபஞ்சத்தின் மீது அன்பு வைத்து பவுலை விட்டுப் பிரிந்தான்.

A.கர்த்தருக்கு ஊழியம் செய்வது ஒரு சிலாக்கியம்

"உங்கள் ஆசாரிய ஊழியத்தை உங்களுக்குத் தத்தமாக அருளினேன். அதைச் செய்யும்படி சேருகிற அந்நியன் கொலை செய்யப்படக்கடவன்"
எண்ணாகமம் 18:7

B.ஊழியர்கள் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும்

"உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்" I கொரிந்தியர் 4:2

C.ஊழியர்கள் ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும்

"பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன் நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்" யோவான் 17:4

II. பலனுள்ள ஊழியத்திற்குத் தேவையானவை

A.வசனத்தை உபயோகப்படுத்துங்கள்

GCI

**“நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப் போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும் அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடு –கிறதாவது: சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு புத்தி சொல்லு.”**

**1.திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு: ஆடுகளைச் சரியாக போஷிக்காவிடில் அவை தடுமாறும்.**

**2. ஆடுகள் காய்ந்து போன குச்சிகளையும் முள்ளுகளையும் தின்றால், அவை திகைக்கும்.**

## B.சாதகமான மனநிலையை நிலை நாட்டுங்கள்

**“கடைசியாக சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகள் ளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள. நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ அவைகளையே செய்யுங்கள். அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்.”**

**பிலிப்பியர் 4:8,9**

**சாதகமான மனநிலையுடைய மக்களை தேவன் விரும்புகிறார் தவறைக் கண்டு பிடிக்கிறவராயிருக்கக் கூடாத. பாதகமான விமர்சனம் செய்கிறதில் தேறினவர்களாய் இருக்கக்கூடாது. எல்லாவற்றுக்கும் மேலாக சந்தேகமுடையவராய் இராதீர்கள். சாதகமான மனநிலையைக் கடைப்பிடிப்பவர்கள் கீழ்காணும் குணாதிசயம் உடையவர்கள்:**

GCI

1. தங்கள் கடினங்களின் மத்தியிலும் தேவகிரியையைக் காணக் கூடியவர்கள்

ஆ.யோசேப்பு: "ஆதி.50:19 நீங்கள் எனக்குத் தீங்கு செய்ய நினைத்தீர்கள். தேவனோ... உயிரோடே காக்கும் படிக்கு அதை நன்மையாக முடியப் பண்ணினார்."

ஆ. மோசே: வனாந்திரத்தில் சபையைக் கட்டினவன் ஆசரிப்புக் கூடாரம் வனாந்திரத்தில் உருவாக்கியவன்.

சூழல்: யாத்திராகமம் 14:13–14

பயங்கர அலைகள், பட்சிக்கும் படைக்குதிரைகள் மற்றும் வறண்ட பாலை நிலம்

- மோசே:விசுவாச வார்த்தைகள்: பக்தி விருத்தி அடையச் செய்பவை
- பிள்ளைகள்: முறையிடுதலின் வார்த்தைகள், முறுமுறுத்தல் மற்றும் சோர்வடையச் செய்தல்

2. பாதகமான சூழல்களில் சாதகமான முடிவைப் பார்க்கக்கூடியவர்கள்

உவமை: பவுல் அப்போஸ்தலன் – கொடிய பாடுகள் ரோமர் 8:28

வாக்குவாதங்கள், பிரிவினைகள், பாலியல் ஒழுங்கீனங்கள், சகோதரனுக்கு விரோதமாக நீதிமன்றத்திற்கு செல்லுத்ல் போன்ற நிலைகளில் சிதைந்து காணப்பட்ட கொரிந்து சபையைப் பார்த்து இன்னமும் அவர் சொன்னது:

"உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக நான் உங்களைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்"

1 கொரிந்தியர் 1:6

GCI

## C.ஆரோக்கியமான சபையை[i] வளர்க்க உழையுங்கள்

**பெரிய ஒரு சபையாக வளர்ப்பதில் மாத்திரம் குறியாய் இராமல், அதை ஆரோக்கியமானதாக வளர்க்க நாம் பிரயாசப்பட வேண்டும்.**

**I. ஆரோக்கியமான சபையின் அடையாளங்கள்**

**அ. சபை செய்யும் சகல காரியத்தின் மையமாக வேதமும் நல்ல போதனையும் இருக்கிறது.**

**ஆ. நடைமுறைரீதியாக சபை உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் அன்பான உறவிலும், கரிசனையாய் இருப்பதிலும் வளர்கிறார்கள்.**

**இ. ஆராதனையானது அகத்தூண்டலுடையதாகவும் பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலுக்குத் திறந்தாகவும் இருக்கிறது.**

**ஈ. ஜெபம் முக்கியத்துவப்படுத்தப்படுகிறது.**

**உ. தலைமைத்துவம் தேவ பக்தி உள்ளதாகவும், திறமைமிக்கதாகவும் வளருகிறதாயும் இருக்கிறது.**

**ஊ. விசுவாசிகளை ஊழியத்தில் அனுமதித்து அவர்களை ஊழியத்தில் திறம்படச் செய்கிறார்கள்.**

**எ. தேவையைச் சந்திக்கும் நோக்கில் சபையின் அமைப்பு மற்றும் நிர்வாகத்தில் முன்னேற்றம் காணச் செய்ய வேண்டி மாற்றங்களை நடைமுறைப்படுத்த விருப்பமுள்ள நிலை.**

**ஏ. உறுப்பினர்கள் தங்கள் வரங்களை ஊழியஞ் செய்யும் நோக்கத்தில் உபயோகிக்கின்றனர்**

GCI

ஐ. உறுப்பினர்கள் உபதேசம், பயிற்சி மற்றும் செல் குழுக்கள் மூலமாக வளர்ச்சி அடைகின்றனர்.

ஒ. உலகளாவிய ஊழியம் மற்றும் சுவிசேஷமயமாக்கலுக்காக அரப்பணித்திருக்கிறவர்கள்.

ஓ. பொருளாதாரத்தின் நல்ல உக்கிராணக்காரர்கள்

2. ஆரோக்கியமான சபையின் எழு கொள்கைகள்

அ. ஜெபம் என்னும் கோட்பாடு அப்போஸ்தலர் 1:14

ஆதித் திருச்சபை ஜெபிக்கிற சபையாய் இருந்தது

ஆ. பரித்தாவியானவரைச் சார்ந்துகொள்ளும் கொள்கை

அப்போஸ்தலர் 1:8

பரிசுத்தாவியின் உதவியில்லாமல் நமது திட்டம், கருத்தரங்கு மற்றும் வழிமுறைகள் அனைத்தும் "பலனற்றவையாய்க் காணப்படும். பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று கர்த்தர் சொல்லுகிறார்."

சகரியா 4:6

இ. சுவிசேஷம் அறிவித்தல் அப்போஸ்தலர் 2:40-42

பேதுரு வல்லமையான சுவிசேஷ செய்தி அளிக்க அநேக ஜனங்கள் இரட்சிப்படைந்தனர்.

ஈ. கிரமமான வேத போதனை அப்போஸ்தலர் 2:42

ஆதித் திருச்சபையானது வேத போதனைக்காக அர்ப்பணித்திருந்தது.

GCI

உ. ஊக்கமும் ஐக்கியமும் அப்போஸ்தலர் 2:42

ஆதித் திருச்சபையார் ஐக்கியத்திற்காக அர்ப்பணித்தவர்கள் 'கொய்னோனியா' என்னும் கிரேக்கப்பதம் ஒருவருக்கு அருகாமையில் வந்து கொண்டு பகிர்ந்து கொள்வது மற்றும் கரிசனை காண்பிப்பதைக் காட்டுகிறது.

ஊ. மாதிரியைக் காண்பித்தல் அப்போஸ்தலர் 6:2-4

ஆதித்திருச்சபையின் தலைவர்கள் தங்களுடைய நல்ல சாட்சி மற்றும் தாழ்மையான சேவையின் மூலம் முன்மாதிரியாய்த் தலைமை தாங்கினர்.

எ. விரிவாக்கக் கொள்கை அப்போஸ்தலர் 6:1,7

ஆதித்திருச்சபை வளர்ச்சியை அதிகரிக்கும் நோக்கில் தன் தலைமைத்துவத்தை விரிவு படுத்துவதில் திறந்த மனதுடன் காணப்பட்டது.

சில சபைகள் தங்களுடைய நிகழ்கால செயல்பாடுகள் சபையின் தேவையைச் சரியாகப் பூர்த்தி செய்ய இயலாத நிலையில் இருந்தும் மாற்றத்தை விரும்பாமலும் இணங்க மனமில்லாமலும் உள்ளன. அதன் விளைவாக சபையானது தேக்கமடைந்து, கொஞ்சமாக மரிக்கிறது

## <u>D.தொடந்து கற்றுக் கொள்பவர்களாய் இருங்கள்.</u>

"புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான். விவேகி நல் ஆலோசனைகளை அடைவான்" நீதிமொழிகள் 1:5

ஸ்டீபன் கவி என்னும் அறிஞர், பயனுள்ள தலைவர்கள் எப்போதும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களிடம் கற்றுக் கொள்வதுடன், கருத்தரங்குகளில் கலந்து கொள்வதன் மூலமாகவும் வாசிப்பதன் மூலமாகவும் கற்றுக் கொள்ள நாடுகிறார்கள் என்கிறார்.

"துரோவா பட்டணத்திலிருந்து கார்ப்பு என்பவன் வசத்தில் நான் வைத்து வந்த மேலங்கியையும், புஸ்தகங்களையும், விசேஷமாய்த் தோற்சுருள்களையும், நீ வருகிறபோது எடுத்துக் கொண்டு வா" 2 தீமோத்தேயு 4:13

சிலர் குறிப்பிட்ட பதவிக்கு வந்த பின்பு கற்றுக் கொள்வதை நிறுத்தி விடுகின்றனர்

"அறிவுப்பூர்வமான வளர்ச்சியை உத்வேகத்துடன் பின்பற்றாத எந்தத் தலைவனும் பயனுள்ள தலைவனாக நீடிப்பதில்லை"

என்பது யூஜீன் ஹாபேக்கெரின் வாதம்

## E.மற்றவர்களை ஊக்கப்படுத்துங்கள்

ஜீவனும் மரணமும் நாவின் அதிகாரத்தில் இருக்கிறது. அதை நேசிப்பவர்கள் அதன் பலனைச் சாப்பிடுவார்கள். நீதிமொழிகள் 18:21

1. தேவன் ஜீவனை உச்சரிக்கிறார்.

நியாயாதிபதிகள் 6:12 கிதியோன்: பராக்கிரமசாலி

ஆதியாகமம் 17:5 ஆபிரகாம் (உயர்த்தப்பட்ட தகப்பன்)

அநேக ஜாதிகளுக்குத் தகப்பனானான்.

2. இயேசு எப்போதும் ஜீவனையே பேசுகிறார்

யோவான் 6:63 என் வார்த்தைகள் ஆவியும் ஜீவனுமாயிருக்கிறது.

மத்தேயு 11:11 யோவான் ஸ்நானகன் குறித்து கிறிஸ்து

வசனம் 3ல் யோவான் இயேசுவை சந்தேகித்தும், இவனைப் பார்க்கிலும் பெரியவன் இல்லை என்று இயேசு சொன்னார். ( வ.11)

GCI

நறுமண தைலத்துடன் வந்த ஸ்திரீயைக் குறித்த இயேசுவின் வார்த்தைகள்.

கேள்வி: ஒருவனும் என்னை உற்சாகப்படுத்தாதிருக்கிறது எதினால்?

கேள்வி என்னவெனில் நீங்கள் என்ன விதைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதே!

கலாத்தியர் 6:7 நீங்கள் எதை விதைக்கிறீர்களோ அதையே அறுப்பீர்கள்

நீதிமொழிகள் 11:25 உதார குணமுள்ள ஆத்துமா செழிக்கும். எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்

விமர்சிக்கக் கூடிய எதிர்மறையான சோர்வின் வார்த்தைகளை நீங்கள் விதைப்பீர்களானால், எதிர்மறையான விமர்சனங்களையேய அறுக்க வேண்டியதாகும்.

## F.குடும்ப பொறுப்பை மறந்து ஊழிய செய்யாதீர்கள்

புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்புகூறுங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்த ..... தம்மைத்தாமே அதற்காக ஒப்புவித்தார். எபேசியர் 5:25,26

"தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும் தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசுவாசிப்பான்? " I தீமோத்தேயு 3:4,5

உலகத்தையே இரட்சித்து நம் சொந்தக் குடும்பத்தை இழப்பது முட்டாள்தனம். சில ஊழியர்களின் அலட்சியத்தால் அவர்களுடைய குடும்பங்கள் தாழ்ச்சி அடைந்திருக்கின்றன. அவர்களுடைய பிள்ளைகள் சபையை

வெறுக்கிறவர்களாய் வரை நேரிடுகிறது. அவர்கள் விரோதம் பண்ணுகிறவர்களும் பின் வாங்கிப் போகிறவர்களுமாய் மாறுகிறார்கள்.

## G.தேவனைப் பிரியப்படுத்துகிறவர்களாய் இருங்கள்

“இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாய் இருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனலல்லவே” கலாத்தியர் 1:10

எல்லா மக்களையும் எல்லா நேரங்களிலும் பிரியப்படுத்துவது கூடாத காரியம். சில நேரங்களிலி சில காரியங்களுக்கு மறுப்புத் தெரிவிக்கவும், ஊழியத்தின் நலனுக்காக சிலருக்கு விருப்பமில்லாத தீர்மானங்களை எடுக்கவும் ஆயத்தமாய் இருக்க வேண்டும்.

## H.ஊழியர்களையும் சபையின் பிரச்சனையும் குறித்து தவறாகப் பேசாதிருங்கள்

கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனம் உண்டாகும்படி பேசுங்கள். எபேசியர்4:29

## I.வசீகரத்தை விட நற்குணமும் தெளிவும் உள்ள நபரை நாடுங்கள்

“இவனுடைய முகத்தையும் சரீரவளர்ச்சியையும் பார்க்க வேண்டாம்... மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்.மனுஷன் முகத்தைப் பார்ப்பான் கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்.” I சாமுவேல் 16:7

| | | |
|---|---|---|
| I தீமோத்தேயு 3 | வசனம் 2 | ஜாக்கிரதை |
| | வசனம் 2 | யோக்கியதை |

GCI

வசனம் 7 புறம்பானவர்களால் நற்சாட்சி

ஒரே இலக்கை மையமாகக்கொண்டு தனது குறிப்புகளைப் பவுல் எடுத்துரைக்கிறார். நல்ல பண்புகளை உடைய மக்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதே அந்த இலக்கு. ஒரு நபரின் தாலந்து மற்றும் வசீகரத்தன்மையையே மக்கள் அதிகமாக நாடுகிறார்கள்.

## J.ஒழுக்கத்தை கடைபிடியுங்கள்

மத்தேயு 18:15-17

உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ் செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்கு செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய். அவன் செவிகொடாமற் போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக் கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற் போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து, சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும் இருப்பானாக.

1. உபாகமம் 13:14 உண்மையைக் கண்டுபிடியுங்கள்
2. நீதிமொழிகள் 18:17 ஒரு தரப்பைக் கேட்டு முடிவுக்கு வந்து விடாதீர்கள்

## K.சிறிய துவக்கங்களை அலட்சியப்படுத்தாதிருங்கள்

சகரியா 4:10 “அற்பமான ஆரம்பத்தின் நாளை அசட்டை பண்ணுகிறவன் யார்?”

சிறிய ஊழியத்தையோ அல்லது எளிய துவக்கத்தை அசட்டை செய்யலாகாது

.

GCI

மத்தேயு25:21 கொஞ்சத்தில் உண்மை

நீதிமொழிகள் 28:20 உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதம் பெறுவான்.

– திறமை, வாக்கு வல்லமை அல்லது அறியப்பட்டவர் என்று சொல்லப்படவில்லை!

## L.மக்கள் உங்களிடம் சொல்லும் இரகசியங்களைக் காத்துக் கொள்ளுங்கள்

நீதிமொழிகள் 11:13 புறங்கூறுதல் இரகசியத்தை வெளிப்படுத்துகிறது. நம்பகமான மனிதனோ காரியத்தை அடக்குகிறான்.

மக்களுடைய தனிப்பட்ட விஷயங்களை ஜெபக் குறிப்பாகக்கூட அவர்கள் அனுமதி இல்லாமல் சொல்லக்கூடாது. உதாரணம்: கர்த்தாவே சகோதரர் ராஜனும் எஸ்தரும் சண்டையிடாமல் இருக்க உதவி செய்யும். அப்படி ஜெபித்தீர்களானால், இந்தக் காரியத்தை எஸ்தர் இரகசியமாய் அறிவித்திருந்தால், ராஜன் இடறல் அடைய வாய்ப்பு உள்ளது.

ஒருவர் சொல்லும் இரகசியம் சபையுடன் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாததாய் இருந்தால் அதைக் காத்துக் கொள்ளுங்கள். ஒருவர் சொன்னதை முறையாகக் கவனிக்காமல் "நீங்கள் சொல்வதை ஒருவருக்கும் சொல்ல மாட்டேன் "என்று சொல்வது முட்டாள் தனம்.

## M.அழைப்பைக் காத்துக் கொள்ளுங்கள்/ சோர்வை மேற்கொள்ளுங்கள்

அப்போஸ்தலர் 26:12-19 2 தீமோத்தேயு 4:7

1. சில சமயங்களில் மக்கள் களைப்படைவது இயல்பு

GCI

a) பெரிய தேவ மனிதர்களும் வாழ்க்கையின் பள்ளத்தாக்கை அனுபவிக்கின்றனர்

i. மோசே: எண்ணாகமம் 11:11-15
"இப்பொழுதே என்னைக் கொன்று போடும்"

ii. எலியா: 1 இராஜாக்கள் 19:4 "போதும்"

iii. யோபு 10:1 "என் ஆத்துமா ஜீவனை அரோசிக்கிறது. நான் என் துயரத்துக்கு எனக்குள்ளே இடங்கொடுத்து, என் மனச் சஞ்சலத்தாலே பேசுவேன்"

iv. எரேமியா: எரேமியா 13:10

v. தாவீது : சங்கீதம் 42:6 "என் ஆத்துமா கலங்குகிறது"

b) வாலிபரும் இளைப்படைகிறார்கள் ஏசாயா 40:30
அப்போஸ்தலர் 15:38,39 மாற்கு என்னும் வாலிபன்

2. ஏன் மக்கள் சோர்வடைந்து சோர்வின் பள்ளத்தாக்கில் விழுந்து விடுகின்றனர்?

தானியேல் 7:25 பரிசுத்தவான்களைச் சோர்வடையச் செய்வது எதிரியின் வேலை.

a) வேலைப்பளு/ குடும்பம்
35 இலட்சம் முறுமுறுக்கும் மக்களுக்குப் போதகராய் இருப்பதை எப்படி விரும்புகிறீர்கள்?

எண்ணாகமம்11:11 மோசே: எல்லா மக்களின் பாரம்
எண்ணாகம் 14:14 பாரம் தாங்கக் கூடாத ஒன்று

b) தேவனிடமிருந்து சுயத்திற்கு கவனத்தைத் திசை திருப்புதல்

GCI

மோசே : நான் சுமக்கவும், போஷிக்கவும் என்னால் கூடுமோ?

எண்ணாகமம் 11:11–14

C) தேவனை விட்டு பிரச்சனையின் மீது கவனத்தை திருப்புதல்

அநீதி, பின் மாற்றம் எரேமியா 12:1,2

d) பயம்

எலியா பயந்தான் 1 இராஜாக்கள் 19:3

e) விரக்தி

கர்மேலிலிருந்து பெயர்செபாவுக்கு 100 மைல்கள் 2 இராஜாக்கள் 19:3,4

விரக்தியின் அடையாளங்கள்

– அர்த்தமற்ற பேச்சு 19:4 என்னை எடுத்துக் கொள்ளும். எனக்கு முன்னானவர்களை விட சிறந்தவன் அல்ல.

– சுய பரிதாபம்: "நான் ஒருவன் மட்டுமே மீந்திருக்கிறேன்."

f. குறுகிய காலத்தில் அநேக சோதனைகள்

| | | |
|---|---|---|
| யோபு 1:14 | – | கொள்ளை |
| யோபு 1:16 | – | தொழில் வீழ்ச்சி |
| யோபு 1:18 | – | 7மகன்கள் 3மகள்களின் மரணம் |
| யோபு 2:7 | – | வியாதி |

g. சிறிய அளவிலான பாராட்டு பெரிய விமர்சனங்கள்

யோபு 4 எலிப்பாஸ் : குற்றமில்லாமல் அழிந்தவன் உண்டோ ?

GCI

சன்மார்க்கர் அதம் பண்ணப்பட்டது எப்போ ?

யோபு 8 பில்தாத் : நீ பாவம் செய்திருக்க வேண்டும்.

h. பொருளாதார நெருக்கடி

i. தலைவர்களிடமிருந்து தேவையற்ற எதிர்பார்ப்புகள்.

j. ஒத்துழைக்காத உடன் ஊழியர்கள்.

3. சோர்ந்து போகிறவர்களைக் குறித்து அக்கறையாய் இருக்கிறார்.

நாம் சோர்ந்து போகிற அநேக வேளைகளில் தேவன் நம்மீது கரிசனையாய் இருக்கவில்லை என உணர்ச்சிவசப் படுகிறோம் ! ஏசாயா 40:27 நான் அறியாதிருக்கிறேனோ ? வசனம் 28ல் தேவன் பதிலளிக்கிறார்.

தம் மக்களின் சோர்வான சூழல்களில் தேவன் அவர்களுடன் இடைபடுகிறார்.

a) மோசே : எண்ணாகமம் 11:16-17 70 மூப்பர்கள் பதிலளிப்பது மட்டுமல்லாமல் பரிகாரமும் கொடுக்கிறார்.

b) எலியா: அவன் ஒரு குகைக்குள் சென்று இரவைக் கழித்தான் கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி: “எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம்” என்றார்.1 இராஜாக்கள் 19:9

பின்பு ஒரு சத்தம் அவனுக்கு உண்டாகி எலியாவே, இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய் ? என்று கேட்டார்.

c) யோபு : இந்த அதிகாரங்களில் யோபுவுக்கு தேவன் பதிலளித்து, பின்பு அவனை சுகமாக்கி செழிக்கச் செய்தார்.

GCI

d) எரேமியா 15 :11 உனக்குச் சகாயஞ் செய்வேன்.

e) தாவீது – தேவன் பதிலளித்து மீட்டார்.

சங்கீதம் : நான் கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்... விடுவித்தார்.

f) பேதுரு

I பேதுரு 5:7 அவர் உங்களை விசாரிக்கிறவராகையால் உங்கள் கவலை களையெல்லாம் அவர் மேல் வைத்து விடுங்கள்.

g) யோவான் 21:15–17 என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக வசனம் 15
என் ஆடுகளை மேய்ப்பாயாக வசனம் 16,17

h) இயேசு

மத்தேயு 11:28 வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

4. மேற்கொள்ளுகிறவர்களாய் நாம் எழும்ப வேண்டும் என தேவன் விரும்புகிறார்.
ஏசாயா 40:31

போரட்டங்கள் நம்மை மிரட்டும் போது, அவைகளை விட்டு ஓடி மறைய வேண்டும் என்னும் சோதனை மேலிடுகிறது.

வ.31 – செட்கைளை அடித்து எழும்புவார்கள்

a) மேற்கொள்கிறவர்களாக தேவன் நம்மை வனைந்திருக்கிறார்.

வெளி 2:7 மேற்கொள்பவன் ஜீவ விருட்சத்தின் கனியைப்

GCI

புசிப்பான்

வெளி 3:12 ஜெயங்கொள்ளுகிறவன் ஆலயத்தின் தூணாவான்

வெளி 3:21 ஜெயங் கொள்பவன் கிறிஸ்துவுடன் சிங்காசனத்தில் உட்காருவான்

b) தேவன் தமது சாயலில் நம்மைப் படைத்திருக்கிறார். ஆதியாகமம் 1 :27

தேவன் ஒரு போதும் தோற்கவோ அல்லது மன அழுத்தத்திற்குட்படவோ செய்யவில்லை.

அவரது திட்டங்கள் சாத்தானின் அநேக இடையூறுகளைச் சந்தித்தன.

1. ஆதாம் / சோதனை
2. பார்வோன்/ மோசே
3. ஆமான்/ யூதர்கள்
4. ஏரோது/ இயேசு

அவை அனைத்திலும் தேவன் மேற்கொண்டார்.

ஆதியாகமம் 1:2 பூமி வெறுமையும், ஒழுங்கின்மையுமாய் இருந்த போது அவர் சோர்வடையவில்லை. அவருடைய ஆவியானவர் அதன் மேல் அசைவாடினார். சபை வெறுமையாகும் போது, நாம் சோர்வடைகிறோம்.

ஆதியாகமம் 3 தேவன் மனிதனைப் பூரணமாய்ப் படைத்தார். சாத்தான் அவனைக் கெடுத்துப் போட்டான். இருந்தாலும் தேவன் மேற்கொண்டார்.

1 பேதுரு 1:20 உலகத் தோற்றத்திற்கு முன்னே உண்டான திட்டம்

c) ரோமர் 8:37 முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்கள்

d) தம் ஜனங்கள் தங்கள் சூழ்நிலைகளுக்கு மேலே எழும்ப முடியும் என்று தேவன் காண்பித்திருக்கிறார் எபிரெயர் 11

GCI

| | | |
|---|---|---|
| வசனம் 7 | : | நோவா அவிசுவாச சூறாவளிக்கு மத்தியில் தன் குடும்பத்தை இரட்சித்துக் கொண்டான். |
| வசனம் 8 | : | ஆபிரகாம் மலடு என்னும் புயலுக்கு மேலாக எழும்பி பல தேசங்களுக்குப் பிதாவானான் |
| வசனம் 22 | : | தள்ளப்படும் சூழலில் இருந்து எழும்பி யோசேப்பு பார்வோனுக்கு அடுத்த நிலைக்கு உயர்ந்து இஸ்ரவேலரை இரட்சித்தான் |
| வசனம் 27 | : | பார்வோன் கோபத்திற்கு மேலாக உயர்ந்து 35 லட்சம் இஸ்ரவேலரை மீட்டான் |
| வசனம் 31 | : | விபச்சாரி என்னும் நிந்தைக்கு மேலாக உயர்ந்து தன்னை மேசியாவின் தலைமுறைக்குட்படுத்திக் கொண்டாள் ராகாப்! |
| வசனம் 32 | : | ஆக்கினை மற்றும் குற்ற மனசாட்சிக்கு மேலாக உயர்ந்து  தாவீது இஸ்ரவேலின் இனிமையான சங்கீதக்காரனாக மாறினான். |
| வசனம் 32 | : | சாமுவேல் ஆவிக்குரிய அந்தகாரம் என்னும் புயலுக்கு மேலெழும்பி இஸ்ரவேலின் பெரிய பெரிய தீர்க்கதரிசியானான் |

e) இயேசு நாம் பின்பற்றும்படியான மாதிரியைப் பின் வைத்திருக்கிறார்.

யோவான் 16:33   திடன் கொள்ளுங்கள்! நான் உலகத்தை ஜெயித்தேன்.

1 பேதுரு 2:21   இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார்.

1. சிந்திக்கக்கூடிய சகல புயலையும் இயேசு சந்தித்தார்
2. வேலையின் அழுத்தம் சாப்பிட நேரமில்லை
3. பரிசேயர் சதுசேயரிடமிருந்து எதிர்ப்புகள்

GCI

4. சீஷர்கள் விட்டு விலகும் அபாயம்

5. பிசாசின் சேனையின் தாக்குதலை எதிர் கொண்டார்

நான் உலகத்தை ஜெயித்தேன்.

உலகம் என்பது என்ன?

I யோவான் 2:16

மாம்ச இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை

5. சோர்வை மேற்கொள்ளும் வழிமுறைகள்.

காத்திருத்தல்: gavah(காவ்வா)= இணைத்துக் கட்டுதல், பொறுமையுடன் எதிர் பார்த்து அமர்ந்திருத்தல், நம்பிக்கை

புதுப்பித்தல்: Chalaph(காலஃப்)= மாறுதல், முன்னேறுதல், புதிதாக்குதல் முழுவதும் மாற்றுதல்

a) அமர்ந்து அறியுஙகள்: சங்கீதம் 46:10

எலியாவின் உதாரணம் : I இராஜாக்கள் 19:11

பெரிதும் பலத்ததுமான காற்றும், பூமி அதிர்ச்சி மற்றும் அக்னி

தேவன் மெல்லிய சத்தத்தில் வெளிப்பட்டார் – அவருடைய சத்தத்தைக் கேளுங்கள்.

சத்தியம்: சில வேளைகளில் தேவன் நம்மை அமர்ந்திருக்கும்படி விரும்புகிறார்

b) நமது மனதைப் புதுப்பித்தல்

ரோமர் 12:2 – மனதைப் புதிதாக்குங்கள்

எபிரெயர் 5:13,14: விசுவாசிகளுக்கு உணவு

GCI

I. தேவனைக் குறித்த உங்கள் சிந்தையைப் புதுப்பியுங்கள்

II. நம்மைக் குறித்த சிந்தையைப் புதுப்பிப்போம்

பிலிப்பியர் 4:8,9

c) ஆண்டவர் அருளும் நன்மைகளை நினையுங்கள்

சங்கீதம் 103:1–5

வசனம் 2 அவர் செய்த உபகாரங்களை மறவாதே.

வசனம் 5 திருப்தியாக்கி, கழுகுக்குச் சமானமாய்.....

சங்கீதம் 37:4 கர்த்தரிடத்தில் மன மகிழ்ச்சியாயிரு. அவர் உன் இருதயத்தின் வேண்டுதலை உனக்கு அருளிச் செய்வார்

தம் பிள்ளைகள் விசுவாசத்தில் வளர அவர்களுக்கு அநேக நினைவு கூறுதலைக் கொடுத்திருக்கிறார்.

i. எபிரெயர் எகிப்திலிருந்து யாத்திரை செய்தல்

யாத்திராகமம் 12:14 பஸ்கா – தேவ மீட்பை நினைவுகூற

ii. வனாந்திரம்

யாத்திராகமம் 16:33 கலசத்தில் மன்னா – தேவ பராமரிப்பின் நினைவு கூறுதல்

iii. யோர்தான்

யோசுவா 4:7 கற்கள் – அசாத்தியங்களை சாத்தியமாக்கும் தேவன் என்பதை நினைவு கூற

# மிக முக்கியமான காரியம்: பிரச்சனையிலிருந்து தேவனுக்கு நேராகக் கவனம் செலுத்த வேண்டும்.

d. ஜெபத்தில் கர்த்தருக்குக் காத்திருத்தல்: ஏசாயா 40:29,31

புதுப்பித்தல்: நமது பெலத்திற்குப் பதிலாகத் தேவ பலத்தைப் பயன்படுத்துதல்

GCI

அவரது வாக்குத்தத்தம் வசனம் 29: சோர்ந்து போகிறவனுக்குப் பெலனும் சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தையும் கொடுப்பவர்

சங்கீதம் 27:14 "கர்த்தருக்குக் காத்திரு. அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்"

அநேக நேரங்களில், காத்திருத்தல் ஜெபத்துடன் இணைந்து செல்கிறது.

## N.பொருளாதார பரிசுத்தத்திற்கு அர்ப்பணிப்பு

1. பண ஆசைக்கு விலகியிருத்தல் I தீமோத்தேயு 6:10

தேவ பக்தியுள்ள தலைவன் தேவனை நேசித்து, பணத்தை உபயோகிக்கிறார். மற்ற வழியில் அல்ல.
(ஒப்பிடுக மத்தேயு 6:24; தீத்து 1:7; I பேதுரு 5:2)

ரிச்சர்டு ஃபோஸ்டர் என்னும் ஊழியர் பேராசை என்னும் பிசாசுடன் நமக்கு இருக்கும்போராட்டத்தைக் குறித்து: "தலைமைத்துவத்தில் நாம் பல பெரிய பொருளாதார சோதனைகளைச்சந்திக்க நேரிடுகிறது. விசேஷமாக மேற்கத்திய தாக்கங்களுக்கு மத்தியில் பேராசையென்னும் பேயுடன் நமக்கு இருக்கும் நேரடி யுத்தத்தில் கிறிஸ்தவத் தலைவர்பண ஆசை இல்லாதிருக்க வேண்டும் என்று பவுல் தீமோத்தேயுவிற்கு அறிவுறுத்துகிறார்."

I தீமோத்தேயு 3:3

"ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும் மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடம் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளினாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்." I தீமோத்தேயு6:9-10

GCI

உ. பொருளாதார அறநெறிகள்

பொது வாழ்வில் முழுமையான தேவ ஆசீர்வாதம் பெற பொருளாதார சுத்தம் மிகமிக அவசியம். பொருளாதாரப் பரிசுத்தத்திற்கு அவசியமான ஏழு காரியங்களை ஜார்ஜ் முல்லர் என்னும் விசுவாச ஜெப வீரன் எடுத்துரைத்துள்ளார். நவீன கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் இவைகளை விட வேறெந்த விதத்திலும் சிறப்பாகச் செயல்படும் என கேத்தரின் மார்ஷல் Beyond ourselves என்னும் புத்தகத்தில் காண்பித்துள்ளார்:

a) ஜெபத்தில் தேவனுக்குத் தெரிவிப்பதைத் தவிர ஒருவரிடமும் அனாதை இல்லத்திற்கு இன்னின்ன தேவைகள் உள்ளன என எந்த ஊழியரும் தெரிவிக்கக் கூடாது.

b) ஒருவரிடமும் கடன் வாங்கக் கூடாது.

c) குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பெறப்பட்ட பணத்தை வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன் படுத்தக் கூடாது.

d) எல்லாக் கணக்குகளும் முறையாகத் தணிக்கை செய்யப்பட வேண்டும்.

e) எந்த ஒரு நபரையும் அவருடைய பொருளாதார உதவிக்காக விளம்பரம் செய்வது ஏற்கப்படலாகாது. ஒவ்வொரு நபருக்கும் தனித்தனியாக நன்றி சொல்ல வேண்டும்.

f) பிரசித்தி பெற்ற, பொறுப்பில் உள்ள எந்த நபரையும் பயன்படுத்தி ஸ்தாபனத்தை விளம்பரம் செய்யக் கூடாது.

g) ஸ்தாபனத்தின் வெற்றி உதவி செய்யப்பட்ட மக்களின் எண்ணிக்கையிலோ அல்லது பெற்றுக் கொண்ட பணத்தின் அடிப்படையிலோ கணக்கிடப்படக் கூடாது. மாறாக ஜெபத்தில் செலவிட்ட நேரத்திற்கேற்ப ஊழியத்தில் தேவன் தரும் ஆசீர்வாதத்தின் அடிப்படையில் கணக்கிட வேண்டும்.

GCI

**3. சம்பந்தப்பட்ட வேறு சில பகுதிகள்**

a) **பணம்** –– **பணத்தைக் கையாள சிலரைத் தேர்ந்தெடுங்கள். இரண்டு அல்லது மூன்று நபர்களால் காசோலைகள் ஒப்பிடப்பட வேண்டும். தனியாகப் பணம் சேகரிக்கவோ, சேகரித்த பணத்தை என்னவோ கூடாது**

b) **வாழ்க்கைத்தரம்** –– **எளிமையாய் வாழுங்கள். தொலை காட்சியிலும் தினசரி செய்திகளிலும் விளம்பரப்படுத்தப்பட்டுள்ள அனைத்தும் உங்களுக்கு உரிமையாக வேண்டும் என்பதில்லை**

c) **முக்கியத்துவம்** –– **ஊழியத்திற்கு முதல் உரிமை**

d) **நேர்மை** –– **பணரீதியான வாக்கைக் காத்தல். பணத்தை சொன்ன நேரத்தில் கொடுத்து விடுங்கள்**

e) **திட்டங்கள்** –– **அதிகப் பணம் சேகரிக்க வேண்டும் என்ற நேரக்கில் பெரிய திட்டம் தீட்டாதீர்கள். அதைச் சமாளிக்க இயலாமல் போய் விடும்.**

## O.தேவ பக்திக்கேதுவாக உங்களைப் பக்கவப்படுத்தி கொள்ளுங்கள்

**I தீமோத்தேயு 4:7 பக்திக்கேதுவாக நம்மைப் பக்குவப்படுத்த எச்சரிக்கிறது.**

**தேவ பக்தி என்பது தேவனை அதிக கனத்துடன் நோக்குவது எனச் சொல்லலாம். இதைச் செய்ய நாம் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களாய் இருப்பது அவசியம். அடுத்த வசனத்தில் ஆவிக்குரிய முயற்சி நித்தியத்திற்கு நம்மைத் தகுதிப்படுத்துகிறது என்று பவுல் சொல்லுகிறார்.**

**சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவ பக்தியானது இந்த**

GCI

ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது.

மற்றவர்களுக்குப் போதிக்கிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்படுத்துகிறேன். I கொரிந்தியர் 9:27

1. சரீர பயிற்சி I கொரிந்தியர் 6:19-20

நாம் உடற்பயிற்சி செய்தால் நமது இரத்த ஓட்டம் சீராகவும், நமது தசைகள் பெலப்படவும் செய்கிறது. நன்றாக சாப்பிடவும், உறங்கவும் முடிவதால் ஆரோக்கியமான சரீரம் உருவாகிறது.

2. ஆகாரம்: எல்லா உணவும் சரீரத்திற்கு ஏற்புடையது அல்ல. நோய்களைத் தடுக்கும் வகையில் கவனமாய் தேவையான ஆகாரங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும.

3. பேச்சு: யாக்கோபு 1:26; 3:2 நமது வார்த்தைகளைக் குறித்து நாம் கவனமாய் இருக்க வேண்டும். கவனமற்ற பேச்சு அநேகப் பிரச்சனைகளை உருவாக்குவதுடன் மனதைப் புண்படுத்தி, தவறான புரிந்து கொள்ளுதலை ஏற்படுத்துகிறது.

4. உணர்ச்சிகள்: பக்குவமான மனிதன் தன உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது எப்படி என்று அறிந்து முன் செல்கிறான். அநேகர் செய்ய விரும்பாத சாதனைகளைச் செய்து முடித்திருக்கின்றனர்.

5. காலந்தவறாமை எபேசியர் 5:16
இயேசு தாம் செய்யவிருக்கிற ஊழியத்தின் மீது கவனம் செலுத்துபவராய் இருந்தார். அவர் தமக்கு நியமிக்கப்பட்ட நேரத்தின் வரையறைக்குட்பட்டு செயல்பட்டார். யோவான் 7:6 ;12:23,27 ;13:1 ;17:1,4

GCI

a) தினமும் செய்ய வேண்டியவை குறித்து ஜெபித்து. திட்டமிடுங்கள்

b) தள்ளிப் போடுதலை மேற்கொள்ளும் ஒரே வழி, அந்தச் செயல் எவ்வளவு கடினமாய் இருந்தாலும் இப்பொழுதே அதைச் செய்து முடிப்பது தான். பின்னர் குறிப்பிட்ட காரியத்தைச் செய்து முடிக்க வேண்டிய கால வரையறையை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்

c) தேர்ந்தெடுங்கள்: முக்கியமான அலுவல்களைத் தேர்ந்தெடுத்துச் செய்யவும், அவசியமற்றவைகளை மறுக்கவும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். உதவிக்காக வருகிற அனைத்து அழைப்புகளும் தேவனுடைய அழைப்பாக இருக்க வேண்டியதில்லை. உங்களை விட சிறந்த முறையில் அந்தக் காரியத்தில் செய்யக்கூடியவர் இருந்தால், அவர்கள் அதைச் செய்யட்டும்.

d) அர்த்தமுள்ள காத்திருப்பு – நீங்கள் பிரயாணம் செய்யும் போதும், குறிப்பிட்ட நபருடன் சந்திக்க காத்திருக்கும் போதும், ஒரு புத்தகத்தைக் கொண்டு வாருங்கள்.

## P.<u>இளமையினிமித்தம் உங்களைக் தாழ்வாக எண்ணாதீர்கள்</u>

**உன் இளமையைக் குறித்து ஒருவனும் அசட்டை பண்ணாதபடி I தீமோத்தேயு 4:12**

ஊழியத்திற்குத் தேவையான ஆவிக்குரிய முதிர்ச்சி மாம்சப் பிரகாரமான வளர்ச்சி அல்ல. சாட்சியான வாழ்க்கைத் தரத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் கிறிஸ்துவின் ஜீவனை உங்களின் வாழ்வில் காண வேண்டும். உங்கள் வயதை அல்ல.

உங்களைக் குறித்தும், உங்கள் போதகத்தைக் குறித்தும் அதிக கவனம் செலுத்துங்கள்.

"நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக் கொண்டு, இவைகளிலே நிலைத்திரு. உன்னைக் குறித்தும் உன்

GCI

உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாய் இரு. இவைகளில் நிலை கொண்டிரு. இப்படி செய்வாயானால் உன்னையும் உன் உபதேசத்தையும் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்வாய்."

I தீமோத்தேயு 4:15,16

## Q.பரிசுத்தத்தில் அர்ப்பணம்

நமது தலைமைத்துவத்திற்கு வரும் பரீட்சையில் பரிசுத்தத்திற்கடுத்த பரீட்சைக்கம் மேலான ஒன்று இருப்பதில்லை. பரிசுத்தமாயிருப்பதென்று ஊழல், அக்கிரமம் தவறு போன்றவைகளிலிருந்து விலகி இருப்பதாகும். நாமும் பவுலுடன் இசைந்து பரிசுத்தத்தைக் குறித்த தேவனுடைய சவாலை ஏற்றுக் கொள்வோம். "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி நீங்கள் வேசித்தன மார்க்கத்துக்கு விலகியிருந்து..."

I தெசலோனிக்கேயர் 4:3

1.பாலுறவுப் பரிசுத்தம்

பாலுறவு ரீதியான பாவம் "போர்னியா" என்னும் வார்த்தையிலிருந்து வேசித்தனம் என்னும் வார்த்தை வருகிறது. இது திருமணத்திற்கு வெளியில் உளள எதிர் பாலருடன் உள்ள நெருக்கமான உறவைக் குறிக்கிறது. விலகுவது என்பது அதனுடன் எந்தப் பங்கும் இல்லாத நிலையைக் குறிக்கிறது. திருமணத்துக்கு அப்பாற்பட்ட எந்த ஒரு பாலுறவு முறைகளுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்.

கிரயத்துக்கு கொள்ளப்பட்டிருக்கிறீர்கள் என்னும் சத்தியமே பாலுறவு ரீதியான நேர்மைக்கு நம்மை நடத்த உந்தும் உந்து சக்தியாய் இருக்கிறது. (I கொரிந்தியர் 6:20) நாம் நமக்குரியவர்களல்ல. நம்மை விலைக்கு வாங்கிய கிறிஸ்துவுடையவர்கள். ஆகவே நமது சரீரத்தின் மூலமாக தேவனுக்கு மகிமை செலுத்தக் கடன்பட்டிருக்கிறோம்.

GCI

**எனவே தனி நபர் பரிசுத்தம் – சரீரத்தால் தேவனை மகிமைப்படுத்தல் – என்பதன் அர்த்தம்:**

- **இச்சையைத் தூண்டும் சித்திரங்கள், புத்தகங்கள் மற்றும் பேச்சுகளுக்கு விலகி நிற்க அர்ப்பணம்**
- **நியாயப்படுத்தும் சிந்தைகளுக்கு விலகி இருத்தல். ( உதாரணமாக எனது பாலுறவு ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்யும்படியாகவே கவர்ச்சிகரமான புத்தகங்களை வாசிக்கிறேன்.)**

**௨. உறவுகளில் தூய்மை**

**கணவன் அல்லது மனைவி அல்லாத ஒருவரிடம் பழகும் போது அப்படிப்பட்ட உறவுகளில் தூய்மையைக் காத்துக் கொள்வது இன்றைய சூழலில் முக்கியப் பிரச்சனையாகக் காணப்படுகிறது. ஆனாலும் எந்தச் சூழலிலும் பரிசுத்தத்தைக் காக்க அழைக்கப்பட்டுள்ளோம். நாம் கவனத்தில் கொள்ள வேண்டியவை:**

- **ஒழுங்கற்ற முறையில் தொட்டுப் பேசுவதைத் தவிர்த்து விடுங்கள்**
- **இரண்டு அர்த்த ஜோக்குகள், தவறான வார்த்தை ஜாலங்களைத் தவிர்க்கவும்**
- **ஒருவரையொருவர் தனியாகச் சந்திக்காமல் பொதுவான இடத்தில் சந்திக்கவும். (குறிப்பிட்ட சந்திப்பைக் குறித்து துணைவருக்குத் தகவல் தெரிவிக்கலாம்)**
- **நாம் ஆலோசனை கொடுக்கும் நபர் நம்மையே சார்ந்திருக்கும் நிலையை வளர்த்து விடலாகாது.**

**எதிர்பாலருக்கு ஆலோசனை சொல்வதைக் கூடுமான வரையில் தவிர்த்து விடுங்கள். இயலாத பட்சத்தில் உங்களுடன் இன்னொரு நபரையும் வைத்துக் கொண்டு ஆலோசனை கொடுங்கள்.**

GCI

## R.பணிவிடைக்காரனின் இருதயம் உடையவராய் இருங்கள்

மனித குமாரன் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ் செய்யும்,
அநேகரை மீட்கும் பொருளாகத் தன் ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்.

மாற்கு 10:45

3 யோவான் 9,10ல் சொல்லப்பட்டுள்ள தியோத்திரேப்புவின் மனப்பான்மைக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

“நான் சபைக்கு எழுதினேன். ஆனாலும் அவர்களில் முதன்மையாய் இருக்க விரும்புகிற தியோத்திரேப்பு எங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனபடியால் நான் வந்தால், அவன் எங்களுக்கு விரோதமாய்ப் பொல்லாத வார்த்தைகளை அலப்பி, செய்து வருகிற கிரியைகளை நினைத்துக் கொள்வேன்.” 3 யோவான் 9,10

பவுல் நமக்கு நல்ல முன் உதாரணம். கிறிஸ்து இயேசுவின் ஊழியக்காரனாகும்படி முழுமையாக மாற்றப்பட்ட ஒரு நபர்

சார்லஸ் ஸ்விண்டால் ஊழியக்காரனின் மூன்று குணாதிசயங்கள் முன் வைக்கிறார்.

⇨ வெளிப்படையான மனுஷீகம்

⇨ உண்மையான தாழ்மை

⇨ முழுமையான நேர்மை

1. வெளிப்படையான மனுஷீகம்

பவுல் தன்னை ஒரு அதீத ஆவிக்குரிய மனிதனாகக் காட்டிச் சொள்ளாமல். தனது பலவீனத்தை ஒத்துக் கொள்ளும் மனம் உடையவராய் இருந்தார்.

GCI

"சகோதரரே நான் உங்களிடத்தில் வந்த போது, தேவனைப் பற்றிய சாட்சியை சிறந்த வசனிப்போடாவது, ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையே அன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித் திருந்தேன். அல்லாமலும் நான் பெலவீனத்தோடும், பயத்தோடும், மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன்." I கொரிந்தியர் 2:1-3

2. உண்மையான தாழ்மை

மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய் அன்பினால் ஒருவரையொருவர் தாங்க வேண்டும் என்று பவுல் நம்மை ஊக்குவிக்கிறார் எபேசியர் 4:2

மெய்யான தாழ்மை உடையவர்கள் இவ்வாறு இருப்பார்கள்

a) எதிர் கொள்ளும்போது தங்களை நியாயப்படுத்த மாட்டார்கள். அவர்கள் எதையும் நிரூபிக்கவோ, எதையும் இழக்கவோ வேண்டியவர்களாக இருப்பதில்லை.

b) மற்றவர்களுக்கு உதவ விருப்பமுள்ளவர்கள் உண்மையான ஊழியன் சேவை செய்யவும், உதவி செய்யவும் முற்படுவான்.

c) சமாதானம் செய்பவர்கள்.

3. முழுமையான நேர்மை

"எங்கள் போதகம் வஞ்சகத்தினாலும் துராசையினாலும் உண்டாகவில்லை. அது கபடமுள்ளதாயும் இருக்கவில்லை. சுவிசேஷத்தை உங்களிடத்தல் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்றெண்ணியபடியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதித்தறிகிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம். " I தெசலோனிக்கேயர் 2:3-4

GCI

## S. இரண்டாம் நிலையில் இருக்கும்போது சேவை மனப்பான்மையுடன் மனரம்மியமாய் இருங்கள்

அடிமை மற்றவர்களை வசப்படுத்துகிற மறைவான எந்த முயற்சியையும் எடுக்க மாட்டான்.

நீங்கள் உதவியாளராக அல்லது இரண்டாவது பொறுப்பில் இருக்கும்போது என்ன செய்து?

பாஸ்டர்.ஜேக் ஹம்ப்டிளிங் என்பவர் கூறும் சில உற்சாகமூட்டும் அறிவுரைகள்

1. தனிப்பட்ட வளர்ச்சியில் கவனம் செலுத்துங்கள்

ஊழியத்தில் எவ்வளவு அனுபவமுடையவராய் நீங்கள் காணப்பட்டாலும் இன்னமும் கற்றுக் கொள்வதை நிறுத்துவது இல்லை.

நாம் அறிவில் வளர வேண்டும். கொலோசெயர் 1:10
2 பேதுரு 1:8

2. உண்மையாய் இருங்கள்
நீதிமொழிகள் 27:18

நமது சுய விருப்பங்க்ளைத் தேவச் சித்தத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும். உண்மையற்றிருக்கச் செய்யும் சோதனைகள் வருவது இயல்பு. கீழ்காணும் வழிகளைக் கடைப்பிடிப்பது நல்லது,

a) போதகரின் நற்பெயரைக் காத்துக் கொள்ளுங்கள்
b) மற்ற சபை உறுப்பினரிடம் உங்களுக்கும் போதகருக்கும் இடையே உள்ள கருத்து வேறுபாடுகளைப் பேசாதிருங்கள்
c) ஒருவரிடமும் உங்கள் போதகரைக் குறித்துப் பேசாதிருங்கள்.

GCI

உங்கள் மனைவியிடம் கூட

d) ஊழியத்தில் காணப்படும் பிரச்சனைகளைக் குறித்து நேரடியாகவே போதகரிடம் பேசுங்கள்

e) ஊழியத்தில் காணப்படும் பிரச்சனைகளைப் பார்க்கிலும் முழு சபையின் ஊழியம் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள்

f) சபையின் உறுப்பினர்களிடமும் மற்ற ஊழியர்களிடமும் உள்ள பிரச்சனைகளை தலைமைப் போதகரிடம் பேசுங்கள்

g) உங்களத பொறுப்பை விட்டு விடுவித்துக் கொள்ளும் எண்ணம் உங்களுக்கு இருக்குமானால் முதலில் அதைப் போதகரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்

h) உங்கள் போதகரைக் குறித்த எந்தக் காரியத்தையும் முதலில் தேவனிடம் எடுத்துச் சொல்லுங்கள். உங்கள் போதகரிடம் ஏற்பட வேண்டும் என்று நீங்கள் விரும்புகிற மாற்றங்களை தேவன் ஒருவரால் மட்டுமே அவரது சமயத்தில் மற்றும் அவருடைய வழியில் கையாள முடியும்.

3. உங்கள் போதகரின் தரிசனத்தைப் பற்றிக் கொள்ளுங்கள்
உங்கள் போதகரின் வெற்றியை உங்களது இலக்காக்குங்கள்.

4. தலைவர்களை உருவாக்குங்கள்

ஊழியத்தின் வெற்றிகளில் ஒன்று மற்றவர்களின் வெற்றி ஆகும்.

5. அப்சலோமாக இருக்காதீர்கள் 2 சாமுவேல் 15

தாவீதின் குமாரனாகிய அப்சலோம் இஸ்ரவேல் மக்கள் மீது பணிவாய் இருப்பதைப் போல் நடித்து, அனைவரின் இருதயங்களையும் திருடிக் கொண்டான்.

GCI

**அப்சலோமின் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்**

**அப்சலோமின் ஆவி:**

a) **உங்கள் வழி போதகரின் வழியை விட உயர்ந்தது என்னும் உயர்வான மேட்டிமை எண்ணம்**

b) **மற்றவர்களை உங்கள் பக்கம் இழுத்துக் கொள்ளும்படியாக உங்கள் தரிசனத்தைச் சொல்லும் போது வார்த்தைகளில் உண்மையில்லாதிருக்கும் நிலை**

c) **மக்களின் இருதயங்களை ஈர்த்துக்கொள்ளும் வகையில் தனிப்பட்ட விதத்தில் மக்கள் தம்மைப் பின்பற்றச் செய்தல்**

## T.கொடுக்கும் மனநிலையை வளர்த்துக் கொள்ளுங்கள்

**நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். ஒன்றையும் வாதினாலாவது விண் பெருமையினாலாவது செய்யாமல், மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறனுக்கானவைகளையும் நோக்குவானாக.**

**பிலிப்பியர் 2:2-4**

**இந்த மனப்பான்மையை ஸ்விண்டால் விளக்கும் விதம் பின்வருவன:**

**"என்னைச் சற்றிலும் உள்ளவர்களைக் குறித்து கரிசனை உள்ளவனாய் இருக்கிறேன்."**

**"நான் ஏன் முதலாவதாக இருக்க வேண்டும்?**
**ஒரு மாறுதலுக்காக மற்றொருவரின் வெற்றிக்காக உதவி செய்யப் போகிறேன்."**

GCI

**“இன்றைக்கு என்னுடைய போட்டி மனப்பான்மையின் வேகத்தைக் குறைத்து. அந்த வேகத்தை மற்றொரு நபருக்கு ஊக்கமளிப்பதில் பயன்படுத்த விரும்புகிறேன்.”**

**”இன்றைக்கு என்னை நானே ஒப்புக் கொடுக்கிறேன். ஆண்டவரே, மற்றவருக்கு எவ்விதம் பதிலளிக்க விரும்புகிறீரோ, அப்படியே நான் செய்ய உதவி செய்யும்.”**

**1. இரகசியமாய் கொடுங்கள். மத்தேயு 6:1-4**

**“நீங்கள் தானம் பண்ணும் போது, உங்களது வலது கை செய்வதை இடதுகை அறியாதிருக்கட்டும்.”**

**2. தாராளமாய்க் கொடுங்கள்**

**ஒனோசிப்போரு பணிவிடைக்காரனின் இருதயம் உடையவனாய் இருந்ததால்,கைதியாய் இருந்த பவுலுக்கும் தயாளமாய் கொடுத்தான்.**

**ஒநேசிப்போருவின் வீட்டாருக்குக் கர்த்தர் இரக்கங் கட்டளையிடுவாராக; அவன் அநேகந்தரம் என்னை இளைப்பாற்றினான். என் விலங்கைக் குறித்து அவன் வெட்கப்படவுமில்லை. அவன் ரோமாவில் வந்திருந்தபோது அதிக ஜாக்கிரதையாய் என்னைத் தேடிக் கண்டுபிடித்தான். அந்நாளிலே அவன் கர்த்தரிடத்தில் இரக்கத்தைக் கண்டடையும்படி, கர்த்தர் அவனுக்கு அனுக்கிரகஞ் செய்வாராக. அவன் எபேசுவிலே செய்த பற்பல உதவிகளையும் நீ நன்றாய் அறிந்திருக்கிறாயே.**
**2 தீமோத்தேயு 1:16-18**

GCI

3. தானாகவே முன் வந்து கொடுங்கள் 2 கொரிந்தியர் 8:3,4

4. தனிப்பட்ட முறையில் கொடுங்கள்

இயேசு தம்மையே நமக்காகக் கொடுத்தார்.

U.மன்னியுங்கள்

சகலவித கசப்பும், கோபமும். மூர்க்கமும் , கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது . ஒருவருக் கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்

எபேசியர் 4:31,32

1. நாம் தவறு இழைக்கும் போது........

மத்தேயு 5:23-24

ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவு கூறுவாயாகில் அங்கே தானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து.

செய்ய வேண்டிய காரியங்கள்

a) நிறுத்து "உன் காணிக்கையை அங்கேயே வைத்து விட்டு..."

b) போ "போய்"

GCI

c) ஒப்புரவாகு "ஒப்புரவாகி"

சரியான எண்ணமுடன், சரியான இருதயமுடனும் சரியான நேரத்தில் தாழ்மையுடன் கர்த்தருக்குக் கீழ்படிந்து போகும் உங்கள் முயற்சியைக் கர்த்தர் கனம் பண்ணுவார்.

2. நாம் தவறு இழைக்கப்படும் போது : மத்தேயு 18:15–35

a)மன்னிக்க வேண்டும்: உங்களுக்குத் தவறு செய்தவர்களை மன்னிக்க மறுப்பீர்களானால்;

i. நீங்கள் ஒரு மாய்மாலக்காரர்: வசனம் 32,33

ii. உள்ளான நிலையில் சமாதானம் இழந்து போவீர்கள் வசனம் 35

b) மன்னிப்பது எப்படி

i. "தேவன் உங்களை மன்னித்ததை நினைவில் கொள்ளுங்கள் என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களை யெல்லாம் மன்னித்து. உன் நோய்களையெல்லாம் குணமாக்கி...." சங்கீதம் 103:2,3

ii. "தேவன் மன்னித்தது போல மன்னியுங்கள் ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" எபேசியர் 4:32

GCI

iii. கசப்பின் வேரைக் களைந்து விடுங்கள். “ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்து போகாமல், யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலகமுண்டாக்குகிறதினால் அநேகரைத் தீட்டுப்படுத்தாத படிக்கு … எச்சரிக்கையாய் இருங்கள்.” எபேசியர் 12:15

## V.தேவன் மறப்பது போல் மறங்கள்

அவர்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார் எபிரெயர் 10:17

ஒரு கெட்ட அனுபவத்தை முற்றிலுமாக மறந்து விடுவது சாத்தியமாகுமா?

வெப்ஸ்டர் அகராதி மறத்தல் என்னும் பதத்தை விளக்கும் விதம்: “குறிப்பிட்ட நினைவை இழந்து விடுவதால்…. கவனம் செலுத்தாதிருத்தல், முக்கியம் கொடாமல் விடுதல் …. தவிர்த்து விடல்: நினைப்பதை, கவனம் செலுத்துவதைக் குறைத்துக் கொள்ளுதல் …. சரியான நேரத்தில் நினைவுகூற இயலாதிருத்தல்.”

1. மறத்தலின் பொருள்

மறதியைக் குறித்து பேசும் போது நாம் அர்த்தங் கொள்வது என்ன என்பதைப் புரிந்து கொள்வது அவசியம்.

a) தவறுகளை சேர்த்து மனதில் வைத்து கொண்டிருக்க சம்மதியாதிருத்தல் 1 கொரிந்தியர் 13:5

b) எந்தத் தவறுக்கும் மேலான நிலையில் இருப்பது சங்கீதம் 119:165

GCI

c) நியாயத்தீர்ப்பு மனநிலையைக் கொண்டிராமல் இருப்பது

I கொரிந்தியர் 13:5

2.பழைய காரியங்களை மறப்பது சாத்தியமே என்று பவுல் சாட்சியிடுகிறார். சகோதரரே, நான் அதைப் பிடித்துக் கொண்டேன் என்று எண்ணுகிறதில்லை. ஒன்றை நான் செய்கிறேன். பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நோக்கி......... தொடருகிறேன். பிலிப்பியர் 3:13

3. யோசேப்பு கடந்த கால சோகங்களை மறக்க முடியும் என்று தன் மகனுக்கு மனாசே என்று பெயரிடுவதன் மூலம் சாட்சி அளிக்கிறார்.

என் வருத்தம் யாவையும் என் தகப்பனுடைய குடும்பம் அனைத்தையும் மறக்கும்படி தேவன் பண்ணினார் என்று சொல்லி, மூத்தவனுக்கு மனாசே என்று பேரிட்டான். ஆதியாகமம் 41:51

## W.துர் உபதேசங்களைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள்.

எந்த போதனையையும் அல்லது உபதேசத்தையும் பரிசோதிக்க உதவும் வேதாகம வழிமுறைகள்:

1. வேதாகமம் சொல்வதற்கு மேலாக எதையும் சொல்லாதீர்கள்.

I கொரிந்தியர் 4:6; I தீமோத்தேயு 1:3,4

a) கொரிந்தியர்கள் பல அனுபவங்களை எதிர்பார்த்தும், அநேக வரங்களை உடையவர்களாயும் இருந்தனர்

b) பவுல் அவர்களை மாம்சத்துக்குரியவர்கள் என்னும் பெருமையுள்ளவர்களென்னும் சாடுகிறார்.

2. எல்லா அற்புத அடையாளங்களும் தேவனிடமிருந்து வருவன அல்ல.

மத்தேயு 7:20,21

GCI

3. எல்லா உபதேசத்தையும் ஜாக்கிரதையாய் கவனியுங்கள்

I தெசலோனிக்கேயர் 5:20

எபிரெயர்கள் பவுலை மேலும் ஆராய்ந்தனர். அப்போஸ்தலர் 17:15

4. அனைத்து ஆவியையும் சோதித்துப் பாருங்கள். I யோவான் 4:1

5. துர் உபதேசம் செய்பவர்களை எதிர்கொள்ள வேண்டிய கடமை நமக்கு உண்டு.

a) பவுல் பேதுருவைக் கடிந்து கொண்டார். கலாத்தியர் 2:14
b) தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட சவுலைக் கேள்வி கேட்டான் I

I சாமுவேல் 24

6. கிறிஸ்தவம் உறவு சார்புடைய ஒன்று, சடங்காச்சாரம் அல்ல.

ஏசாயா 29:13

## III. முடிவுரை

### A.<u>நினைவில் கொள்ள வேண்டிய பாடங்கள்</u>

பவுல் தீமோத்தேயுவிற்குக் கொடுத்த புத்திமதிகளின் வாயிலாக நாம் கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்கள் யாவை?

1. கிறிஸ்தவ ஊழியத்தில் பணிவிடையின் ஆவியைப் பெற்றிருப்பதை விடச் சிறந்த இலக்கு ஒன்றும் இல்லை. அதிகாரம் மற்றும் பொறுப்பின் வளர்ச்சியால் பணிவிடை செய்யும் மனப்பக்குவம் குறுகிப் போகலாகாது. அது வளர்ச்சி அடைய வேண்டும். (கிறிஸ்துவின் உதாரணத்தைக் கவனிக்கவும்) மத்தேயு 20:25-28

GCI

2. ஊழியத்தில் உள்ள மற்றொரு சோதனை சமநிலை தவறுதல் ஆகும். I தீமோத்தேயுவில் சமநிலையைக் கவனிக்கிறோம். பக்தி மற்றும் ஒழுக்கம், பொது சேவை மற்றும் உள்ளான நேர்மை, மற்றவர்களைப் போதித்தல் மற்றும் தனிப்பட்ட விதத்தில் வளர்ச்சி ஆகியவற்றில் நமநிலை காக்கப்பட வேண்டும். ஆரோக்கியமான வேதத்தின் அடிப்படையிலான ஊழியம் எந்தக் காரியத்திலும் வரம்பு மீறிச் செயல்படுவதில்லை. ஆனால் சமநிலை அணுகுமுறையைக் கையாள முயற்சிக்கிறது.

3. ஊழியத்தின் சிறந்த நடைமுறைப் பயன்பாடு வேதாகமப் பிரசங்கம் ஆகும். தேவன் தமது வார்த்தையைக் கையளித்திருக்கிறார். நமது ஆத்துமாவுக்கு அதிகப் பிரயோஜனமுள்ள அவ்வார்த்தைகளை முதலில் நாம் உட்கொண்டு, பின்பு மற்றவர்களுக்கு வாசித்து, விளக்கி அவைகளைத் தங்கள் வாழ்க்கையில் நடைமுறைப் படுத்த உதவ வேண்டும்.

4. ஊழியத்தின் வளர்ச்சிக்கேற்ற ஊழியரின் வளர்ச்சி முக்கியமானதாகும்.
I தீமோத்தேயு 4:12
மாதிரியாக இரு வசனம் 15 உன் வளர்ச்சி மற்றவர்களுக்கும் காணப்பட வேண்டும்.

5. ஊழியரின் நேர்மைக்குச் சிறந்த சான்று விடாமுயற்சி எனலாம். "இவைகளில் <u>விடாமுயற்சியுடன்</u> நிலை கொண்டிரு." ( I தீமோத்தேயு 4:16) என்று பவுல் ஆலோசனை கூறுகிறார். நீடித்து நிலைத்திருக்கும் ஊழியம் இழந்தோரை மீட்டுக் கொள்ளவும். புதிய கிறிஸ்தவர்களை உருவாக்கவும், எல்லாவிசுவாசிகளை வளரச் செய்யவும் பாடுபடுகிறது.

## <u>B. தவிர்க்க வேண்டிய படுகுழிகள்</u>

1. அதிகாரப் போக்கு : இந்தத் தலைவர்கள் வல்லமை, அதிகாரம் கீழ்படிதலை வலியுறுத்தி பேசுவார்கள். இப்படிப்பட்டவர் கடினமானவராகவும், ஆதிக்கம்

GCI

செலுத்துபவராகவும், போதனைக்குச் செவி
கொடாதவராகவும், சுய நலமிக்கவராகவும்
இருப்பவர்.

1 தெசலோனிக்கேயர் 2:5-12; 2 கொரிந்தியர் 2:1-5
மத்தேயு 7:25,29 ; பிலிப்பியர் 2:5-11

2. தனித்துவம் : எங்கள் சபையே சரியான புதிய ஏற்பாட்டு சபை இவர்கள் தங்கள் சபையாரிடம் சபையின் சிறப்புத்தன்மையை வாதித்து மக்களைத் தங்கள் வழிகளில் ஈர்க்க முயற்சி செய்வர். மற்ற சபைத் தலைவர்கள் கேலிக் கூத்தாக்கப்பட்டு, அவமதிக்கப்படுவர். இது ஒரு மனநலம் பாதித்த சபை. இதன் வாதமெல்லாம் "வெளியிலிருக்கும் மக்கள் யாவரும் நமக்கு விரோதமாகச் செயல்படுகின்றனர்."

3. பேராசை : பணத்திற்காக வஞ்சித்தல், பணத்திற்காக ஊழியம் செய்தல்

4. நியாயப்படுத்துதல் : தனது வாழ்க்கைத்தரத்துக்கேற்ப வேத வசனத்தைத் திரித்துப் பேசும் முயற்சி

5. காமவிகாரம் : பாலறவு ரீதியான கட்டுப்பாட்டை மீறி, எதிர்பாலருடன் நெருக்கமாகப் பழகுதல்

6. கணக்கு கொடாமை : இரகசிய செயல்பாடு, கனிவற்ற, அப்பாற்பட்டு

செயல்படும் அனுகுமுறை. "நான் கர்த்தரால்
அபிஷேகம் பண்ணப்பட்டவன் ஜாக்கிரதை"

GCI

என மிரட்டும் ஊழியரைக் குறித்து
எச்சரிக்கையாய் இருங்கள்
மாற்கு 6:30
சீஷர்களின் ஊழிய அறிக்கை

7. விமர்சனம் : எலலாத்தலைவரும் விமர்சிக்கப்படுகிறார். ஆக்கப்பூர்வமான விமர்சனத்துக்கு நன்றி தெரிவித்து, சுய பரிசோதனை செய்து, சில மாற்றங்களை ஏற்படுத்த விளைவது தேவனைச் சார்ந்து ஜீவிக்க நமக்கு உதவி செய்கிறது.

8. தனிமை : தேவ ஊழியர்கள் அநேக வேளைகளில் தனிமையை உணர்கின்றனர். ஆனால் மற்றவர்களுடன் நல்ல உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

9. உபயோகப்படுத்தப்பட்டும் பாராட்பெறாதிருத்தல் : கேயாசி எலிசாவின் ஊழியனாயிருந்தும் மிக எளிமையான வேலையே அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அனைத்துப் புகழும் எலிசாவுக்குச் சென்றது.
2 இராஜாக்கள் 4

எபிரெயர் 6:10

ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்ததினாலும் செய்த வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே.

GCI

உங்கள் உத்தமமான சேவைக்கு நிச்சயமான பிரதிபலன் உண்டு.

10. எனக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப் போல அஸ்திபாரம் போட்டேன். வேறொருவன் அதின் மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின் மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன்.

11. போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது.

12. ஒருவன் அந்த அஸ்திபாரத்தின் மேல் பொன், வெள்ளி, விலையேறப் பெற்றக் கல், மரம், புல், வைக்கோல், ஆகிய இவைகளைக் கட்டினால்,

13. அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப் பண்ணும். ஏனெனினல் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்.

14. அதின் மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான்

a) அநேக பிரதிபலன்கள் பரலோகத்தில் கிடைக்கின்றன; பூமியில் அல்ல
   வசனம் 13-14
b) எல்லாப் பிரதிபலன்களும் தரத்தை சார்ந்தே அமைகின்றன. எண்ணிக்கையில் அல்ல. வசனம் 13